# ஜோலார்பேட்டை நகராட்சி
# நிர்வாக அறிக்கை
# 2022-2023

# ஜோலார்பேட்டை நகராட்சி
# திருப்பத்தூர் மாவட்டம்
## நிர்வாக அறிக்கை – 2022–2023

### 1. அமைப்பும் மேலாண்மையும்

**1. எல்லை வரம்பு:**

ஜோலார்பேட்டை நகரின் பரப்பளவு 13.06 ச.கி.மீ. ஜோலார்பேட்டை நகராட்சி 23.5.1971ல் முதல் நிலை நகர பேரூராட்சியாக இருந்து 01.07.2004 ம் ஆண்டு முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, அதன் பிறகு அரசு ஆணை என்.154, நாள்:09.08.2010–ல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டின் மக்கள் தொகை 35410 ஆகும். 2011 ம் ஆண்டின் மக்கள் தொகை 29662 ஆகும்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.135, நாள்:11.6.1996ன்படி நகர்மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 18 வார்டுகளாக பிரித்து அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### நிர்வாகத் தொகுப்பு:–

உறுப்பினர் விவரமும் அதில் பொது மக்கள் ஒதுக்கப்பட்ட வார்டுகள் விவரமும் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் விவரமும் கீழ்கண்டவாறு உள்ளது. நகரமன்ற தலைவர் நகரமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கும் முறை அமுலில் உளளது. 2022ம் ஆண்டில் நடைபெற்ற 18 நகர்மன்ற உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு 04.03.2022ம் நாள் முதல் பதவி ஏற்று நகரமன்றம் செயல்பட்டு வருகிறது. 2022 ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட வார்டுகள் விவரம்.

| | |
|---|---|
| 1) தாழ்த்தப்பட்ட வகுப்பினர்(பெண்) | 4,5,11 வார்டு |
| 2) தாழ்த்தப்பட்ட வகுப்பினர்(பொது) | 2 வார்டு |
| 3) பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டது | 6 வார்டு |
| 4) பொது பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது | 9 வார்டு |
| **மொத்தம்** | **18 வார்டு** |

நகராட்சி ஆணையாளர்

| பதவி | பெயர் | பணிபுரிந்த காலம் |
|---|---|---|
| ஆணையாளர் | திரு. கோ.பழனி | 01.04.2022 முதல் இன்று வரை |

**நகரமன்ற தலைவர் துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர் விவரம்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி காவியா மா | 16 | நகரமன்றத் தலைவர் |
| 2. | திருமதி இந்திரா பெரியார்தாசன் | 7 | நகரமன்ற துணைத்தலைவர் |
| 3. | திரு பிரசாத் ச | 1 | நகரமன்ற உறுப்பினர் |
| 4. | திரு மனோகரன் பி கே | 2 | நகரமன்ற உறுப்பினர் |
| 5. | திரு சிவா சீ | 3 | நகரமன்ற உறுப்பினர் |
| 6. | திருமதி வித்யா சு | 4 | நகரமன்ற உறுப்பினர் |
| 7. | திருமதி புன்னகை க | 5 | நகரமன்ற உறுப்பினர் |
| 8. | திரு சக்கரவர்த்தி கு | 6 | நகரமன்ற உறுப்பினர் |
| 9. | திரு மோகன்ராஜ் எஸ் | 8 | நகரமன்ற உறுப்பினர் |
| 10. | திருமதி மங்கைசத்தியா ஜெ | 9 | நகரமன்ற உறுப்பினர் |
| 11. | திரு சிவக்குமார் ரா | 10 | நகரமன்ற உறுப்பினர் |
| 12. | திருமதி மாலதி ர | 11 | நகரமன்ற உறுப்பினர் |
| 13. | திருமதி பூந்தமிழ் கோ | 12 | நகரமன்ற உறுப்பினர் |
| 14. | திருமதி சாந்தி ரா | 13 | நகரமன்ற உறுப்பினர் |
| 15. | திரு தேவராஜி அ | 14 | நகரமன்ற உறுப்பினர் |
| 16. | திருமதி சுதா பி | 15 | நகரமன்ற உறுப்பினர் |
| 17. | திரு ஏழுமலை எஸ் | 17 | நகரமன்ற உறுப்பினர் |
| 18 | திருமதி சுமதி இ | 18 | நகரமன்ற உறுப்பினர் |

**கூட்டங்கள்:–**

1. நகரமன்றத்தின் சாதாரண கூட்டம் அந்தந்த மாதங்களில் நடத்தப்பட்டது. அவசியத்தை முன்னிட்டு அவசர கூட்டங்கள் அவ்வப்போது நடைபெற்றுள்ளது. நடைபெற்ற சாதரண கூட்டங்களின் எண்ணிக்கை – **16,** முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை **325.** நகரமன்ற அவசர கூட்டம்–**8** , முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை **20.**

2. நகரமன்றத்திற்கு வைக்கப்படும் பொருட்கள் யாவும் அவ்வப்போது முடிவு செயயப்படுகின்றன. நகராட்சி நடைமுறை தொகுப்பில் உள்ள முறையின் படியும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் அட்டவணை 3ல் கண்டுள்ள விதிகளின் படியும் மன்றக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

**அறிக்கையாண்டில் அடியிற்கண்ட குழுக்கள் செயல்பட்டு வந்தன (01.04.2022 முதல்)**

1. நியமனக்குழு
2. ஒப்பந்தக்குழு
3. வரிமேல் முறையீடுக்குழு

## குழு உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| **நியமனக் குழு** | அ.தேவராஜ் | வார்டு–14 |
| **வரி மேல் முறையீட்டு குழு** | 1.சீ.சிவா<br>2.கு.சக்கரவர்த்தி<br>3.ர.மாலதி<br>4.பி.சுதா | வார்டு–03<br>வார்டு–06<br>வார்டு–11<br>வார்டு–15 |
| **ஒப்பந்தக் குழு** | இ.சுமதி | வார்டு–18 |

**மேலாண்மை:–**

அலுவலக பணியாளர்கள் வரிவசூல் செய்யும் பணியாளர்கள் உள்பட அறிக்கையாண்டில் கீழ்கண்டவாறு செலவு செய்யப்பட்டுள்ளது.

ஆணையர் சம்பளம் மற்றும் பற்றுச் சீட்டுத் தொகை எதும் செலுத்தப்படவில்லை.

**பொது நிர்வாகம் மற்றும் வசூல் பணியாளர்கள் விவரம்**

| | | |
|---|---|---|
| 1 | மேலாளர் | 1 |
| 2 | உதவியாளர் | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | 2 |
| 4 | தட்டச்சர் கூடிய இளநிலை உதவியாளர் | 1 |
| 4 | பதிவறை எழுத்தர் | 1 |
| 5 | வருவாய் ஆய்வர் | 1 |
| 6 | வருவாய் உதவியாளர் | 4 |
| 7 | அலுவலக உதவியாளர் | 1 |
| 8 | புள்ளி விவரக்குறிப்பாளர் | 1 |

**பொறியியல் பிரிவு**

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சி பொறியாளர் | 1 |
| 2 | பொது பணி மேற்பார்வையாளர் | 1 |
| 3 | பணி ஆய்வாளர் | 1 |

**நகரமைப்பு பிரிவு**

| | | |
|---|---|---|
| 1 | நகரமைப்பு ஆய்வாளர் | 1 |

**பொது சுகாதாரப்பிரிவு**

| | | |
|---|---|---|
| 1 | சுகாதார ஆய்வாளர் | 1 |
| 2 | சுகாதார மேற்பார்வையாளர் | 1 |
| 3 | ஓட்டுநர் | 1 |
| 4 | துப்புரவு பணியாளர் | 22 |

பொது நிர்வாகம், வசூல் பணியாளர்கள், பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் பொது சுகாதாரப்பிரிவு சம்பளம் ரூ.**2,14,75,122/–**

இந்நகராட்சி அலுவலகம் சொந்தக் கட்டிடத்தில் போதுமான வசதிகளுடன் இயங்கி வருகின்றது.

**பணியமைப்பு:-**

| | | |
|---|---|---|
| பொறியாளர் | திரு.எச்.கோபு | 01.04.2022 முதல் 25.01.2023 முடிய |
| இளநிலைப் பொறியாளர் | பணியிடம் தோற்றுவிக்கப்படவில்லை | – |
| உதவிப்பொறியாளர் | பணியிடம் தோற்றுவிக்கப்படவில்லை. | – |
| பொது பணி மேற்பார்வையாளர் | திரு.அ.நந்தகுமார் | 01.04.2022 முதல் 31.03.2023 முடிய |
| பணி ஆய்வர் | திரு.தே.ஸ்டாலின் | 01.04.2022 முதல் இன்று வரை |

**சாலைகள்:–**

இந்நகராட்சி எல்லைக்குள் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம் 63.214 கி.மீ.

**சாலைகளின் விவரம்**

| | | |
|---|---|---|
| 1. | சிமெண்ட் சாலை | 19.845 கி.மீ. |
| 2. | தார் சாலை | 41.718 கி.மீ. |
| 3. | மண் சாலை | 4.771 கி.மீ. |
| 4. | பேவர் பிளக் சாலை | 4.486 கி.மீ. |
| | | ———————— |
| | மொத்தம் | 70.820 கி.மீ. |
| | | ———————— |

சாலைகளும் தெருக்களும் போதுமான விசாலமுள்ளதாக இருக்கிற சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் ஆட்சேபணைகரமான ஆக்கிரமிப்புகளின் மீது புகார் வந்தவுடன் அப்புறப்படுத்தப்பட்டு ஆட்சேபனை இல்லாதவைகளுக்கு கட்டணம் விதித்தும் ஒழுங்குப்படுத்தப்படுகிறது.

## மின் விளக்கு வசதி:–

அறிக்கையாண்டில் கீழ்கண்டவாறு மின் விளக்குகள் பராமரிக்கப்பட்டு வந்துள்ளன.

01.04.2021 முதல் 31.03.2022 வரை

| | | |
|---|---|---|
| 1. குழல் விளக்கு | – | 661 |
| 2. சோடியம் ஆவி விளக்கு | – | 19 |
| 3. சி.எப்.எல். விளக்கு | – | 919 |
| 4. உயர் கோபுர மின் விளககு | – | 4 |
| மொத்தம் | | 1603 |

| | |
|---|---|
| 1. அறிக்கையாண்டில் தெரு விளக்கு மின் கட்டணம் | ரூ.22.00/–லட்சம் |
| 2. பராமரிப்பு செலவு | ரூ.10.00/–லட்சம் |
| | ரூ.32.00 /–லட்சம் |

## கல்வி:–

### கல்வி வசதி வாய்ப்பு:–

அறிக்கையாண்டில் நகராட்சியில் பள்ளிகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

இந்நகராட்சியில் பள்ளிகள் அனைத்தும் கல்வித்துறையின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. சார்நிலை கருவூலகத்தின் மூலம் ஊதியம் பெற்று வருகின்றனர்.

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம்

இந்நகராட்சியில் சத்துணவு மையங்கள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

## உயர் நிலைக்கல்வி:–

இந்நகராட்சியில் உயர்நிலைப் பள்ளிகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

## சிறப்பு பள்ளிக் கூடங்கள்:–

இந்நகராட்சியில் சிறப்பு பள்ளிகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

## பள்ளி துாய்மை பணிகள்:–

அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் துாய்மை பணிகள் நகராட்சி மூலம் ஆண்டிற்கு 07.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

## பொது நூலக நிலையஙகள்:–

மாவட்ட நூலக குழுவினரால் இரண்டு பொது நூலக நிலையம் இந்நகரில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியினால் படிப்பகங்கள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

## இறப்பு விதிதமும் தொற்று வியாதியும்:—

2022—ம் ஆண்டு அறிக்கையாண்டில் பதிவான இறப்பு 216 இது சென்ற ஆண்டில் 201 ஆகும். அறிக்கையாண்டில் கொள்ளை நோய் தொற்று வியாதிகள் கண்டு எவரும் இறக்கவில்லை.

## உரம் தாயாரிப்பு:—

அறிக்கையாண்டில் பொட்டிகான் பள்ளத்தில் அமைத்துள்ள நகராட்சி நுண் உர மையத்தில் உரம் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

## உணவு பொருள் கலப்படம்:—

இந் நகராட்சியில் உணவு ஆய்வாளார் இல்லாத காரணத்தினால், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறையின் உணவு பாதுகாப்பு ஆய்வாளரால் உணவு மாதிரிகள் எடுக்கப்பட்டு உணவு பொருட்கள் கலப்படம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## சந்தைகளும், திருவிழாக்களும்:—

இந்நகராட்சியில் புதன் கிழமைதோறும் சிறப்பு வாரச்சந்தை எஸ்.கோடியூர் என்ற இடத்தில் நடைபெறுகிறது சந்தை நடைபெறும் நாளுக்கு முன்பு நடைபெற்றப் பின்பும் துப்புரவு பணியாளர்களை கொண்டு மேற்படி இடம் சுத்தம் செய்யப்படுகிறது. 2022—2023—ம் நிதியாண்டில் ரூ.7.19 இலட்சம் குத்தகை விடப்பட்டுள்ளது.

## பூங்காக்கள்:—

இந்நகராட்சியில் வார்டு எண்.4 பாபு நகர் பகுதியில் ஒரு சிறுவர் பூங்கா நகராட்சியால் பராமரிக்கப்பட்டு பொது மக்களால் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## நகர் நலமும் பாதுகாப்பும்:—

2022—2023 ம் நிதியாண்டில் நகராட்சியில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பொருட்டு தடுப்பு நடவடிக்கையாக 24 டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கான பணியாளர்கள் மூலம் கொசுவை ஒழிக்க கொசு மருந்து தெளிக்கப்பட்டும், புகைமருந்து அடிக்கப்பட்டும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு டெங்கு கொசு ஒழிப்பு பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## கழிவுநீர் திட்டம்:

இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் இல்லை, நகரில் உள்ள திறந்த சாக்கடைகளை நகராட்சி துப்புரவு பணியாளர்களால் கழிவுநீர் தேங்காவண்ணம் முறையாக சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

## தீ தடுப்பு:

இந்நகராட்சி அலுவாகத்தில் தீ தடுப்பு சாதனம் ஒன்று அவசர தேவைக்காக பொருத்தப்பட்டு இருக்கிறது.

## தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலநிதி 0.3ரூ மற்றும் 1ரூ

2021–2022 ஆம் ஆண்டில் புதிய கட்டிடங்கள் கட்ட அனுமதி வழஙகப்பட்ட கட்டிட விண்ணப்பங்களில் சம்மந்தப்பட்ட உத்தேச கட்டுமானங்களின் மதிப்பீட்டில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல நிதிக்காக 0.3% மற்றும் 1% சதவிகித சந்தா தொகைக்குண்டான வரைவு கேட்பு வரைவோலைகள் பெறப்பட்டு மேற்படி நல வாரியத்திற்கு மாதாமாதம் அனுப்பிவைக்கப்பட்டது.

## பேருந்து நிலையஙகள்:–

இந்நகராட்சியில் பேருந்து நிலையம் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

## ஆடு அறுக்கும் தொட்டி:–

இந்நகராட்சியில் ஒரு ஆடு அடிக்கும் தொட்டி பராமரித்தகப்பட்டு வருகிறது.

2021–2022ம் நிதியாண்டில் ரூ.45360/–க்கு குத்தகை விடப்பட்டுள்ளது.

## குடிநீர் விநியோகம்:–

இந்நகராட்சியில் பின் வரும் ஆதாரங்களைக் கொண்டு குடிநீர் விநியோகம் நடைபெறுகிறது.

1) பாலாறு தலைமை நீரேற்று நிலையம்.
2) கூட்டுக்குடிநீர் திட்டம் (CWSS)

## நீரேற்றும் நிலையம்:–

இந் நீரேற்றும் நிலையம் 1990ல் ஆரம்பிக்கப்பட்டது 4 நீர் உறிஞ்சி கிணறுகள் 1 நீர் சேகரிக்கும் கிணறு ஆகியவைகள் அமைக்கப்பட்டுள்ளன.  75 குதிரை சக்தி திறன் கொண்ட மின்மோட்டரும் 50 குதிரைத் திறன் மற்றும் 60 குதிரை திறன் கொண்ட நீர் மூழ்கி மோட்டார்கள் மூலம் நீரேற்றும் செய்யபபட்டு வருகிறது.

## மேல் நிலை  நீர்தேக்க தொட்டிகள்:–

இந்நகராட்சியில் 9 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் உள்ளது.

| | | |
|---|---|---|
| 1. அசோக் நகர் | – | 4,00,000 லிட்டர். |
| 2. கோடியூர் | – | 4,00,000 லிட்டர். |
| 3. புதூர் | – | 1,00,000 லிட்டர். |
| 4. ஊசிநாட்டன் வட்டம் | – | 1,00,000 லிட்டர். |
| 5. வாலாட்டியூர் | – | 1,00,000 லிட்டர். |
| 6. அனிபிரான் தெரு | – | 60,000 லிட்டர். |
| 7. குடியான் குப்பம் | – | 1,00,000 லிட்டர். |
| 8. இராமரெட்டியூர் | – | 1,00,000 லிட்டர். |
| 9. ஜெயமாதாநகர் | – | 1,00,000 லிட்டர். |

# ஜோலார்பேட்டை நகராட்சி
## 2022–23 ஆம் ஆண்டு செய்யப்பட்ட திட்டப்பணிகள் விவரம்

| வ.எண் | பணியின் விவரம் | செலவினம் தொகை ரூ. |
|---|---|---|
| 15–வது மத்திய நிதிக்குழு (15–CFC – 2020–2021) | | |
| 1 | பொது கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் காந்தி ரோடு வார்டு எண்.10, நல்லான் தெரு வார்டு எண்.13, ஊசிநாட்டான் வட்டம் வார்டு எண்.5, கேசவரெட்டி தெரு வார்டு எண்.4 | 584350 |
| 2 | நகராட்சி பொட்டிகான்பள்ளம் உரக்கிடங்கில் பேலிங் மெஷின் அமைக்கும் பணி (2021–2022) | 359900 |
| 3 | வார்டு எண். 1 முதல் 18 வரை குப்பை தொட்டிகள் (Rectangular Pole) சப்ளை செய்யும் (2021–2022) | 800000 |
| 4 | பொட்டிகான் பள்ளம் வளமீட்பு மையம் (RRC) அமைக்கும் பணி (2021–2022) | 2024578 |
| 5 | வார்டு எண்.12 போலிஸ் ஸ்டேசன் ரோட்டில் ஏற்கெனவே உள்ள AC Pipe மாற்றி புதியதாக DI Pipe அமைக்கும் பணி (2021–2022) | 2500000 |

| வ.எண் | பணியின் விவரம் | செலவினம் தொகை ரூ. |
|---|---|---|
| கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுதிட்டம் (KNMT) (2021–2022) | | |
| 1 | நவீன தகன எரிவாயு மேடை அமைக்கும் பணி | 3639032 |
| 2 | வார்டு எண்.1,2,3,4,5,6,7,8,9,10,11,12,13,14,17,18 பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 16534001 |

| வ.எண் | பணியின் விவரம் | செலவினம் தொகை ரூ. |
|---|---|---|
| நமக்கு நாமே திட்டம் (NNT) (2021–2022) | | |
| 1 | வார்டு எண்.2, திருப்பத்தூர் – வாணியம்பாடி மெயின் ரோடு (புதூர்), ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி | 300000 |
| 2 | வார்டு எண்.11, ஊசிநாட்டான் வட்டம் கேசவ ரெட்டி தெரு மற்றும் கேசவரெட்டி தெரு இணைப்பு சாலை உயர்கோபுர மின் விளக்கு அமைக்கும் பணி | 351522 |
| 3 | வார்டு எண்.2, வாணியம்பாடி மெயின் ரோடு மற்றும் ஆஞ்சநேயர் கோயில் சந்திப்பு சாலையில் உயர்கோபுர மின் விளக்கு அமைக்கும் பணி | 351522 |
| 4 | வார்டு எண்.4, பார்சம்பேட்டை இணைப்பு சாலையில் உயர்கோபுர மின் விளக்கு அமைக்கும் பணி | 351523 |
| 5 | வார்டு எண்.6, குடியானகுப்பம் மற்றும் திருப்பத்தூர் ரோடு இணைப்பு சாலையில் உயர்கோபுர மின் விளக்கு அமைக்கும் பணி | 351522 |

| வ.எண் | பணியின் விவரம் | செலவினம் தொகை ரூ. |
|---|---|---|
| **பொது நிதி (General Fund)** (2021–2022) | | |
| 1 | வார்டு எண்.1 முதல் 18 வரையில் பழுதடைந்துள்ள சிமெண்ட் சாலைகள் பராமரிப்பு பணிகள் செய்தல் (2021–2022) | 500000 |
| 2 | அலுவலகத்தில் கணினி பிரிவு மற்றும் அனைத்து பிரிவுகளுக்கும் இணையதளம் மூலமாக மென்பொருளை ஏற்றுவதற்கு தேவையான கணினி பிரிண்டர்கள் மற்றும் உதிரி பொருட்கள் சப்ளை செய்யும் பணி (2021–2022) | 291584 |
| 3 | எஸ்,கோடியூர் வாரச் சந்தையினை சீரமைக்கும் பணி (2022–2023) | 174264 |
| 4 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் BOV 15 Nos.ஆண்டு பராமரிக்கும் பணி (2021–2022) | 494752 |
| 5 | பொட்டிக்கான பள்ளம் உரக்கிடங்கில் அமைந்துள்ள துண்டாக்கும் இயந்திரம் மற்றும் அதிர்வு இயந்திரம் பராமரிப்பு பணி (2021–2022) | 296320 |
| 6 | இந்நகராட்சி வார்டுகளில் அமைந்துள்ள உயர் கோபுர மின் விளக்குகள் பராமரிப்பு பணி (2022–2023) | 249829 |
| 7 | வார்டு எண். 1 முதல் 18 வரை தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு உதிரிபாகங்கள் சப்ளை செய்யும் பணி | 291992 |
| 8 | அம்பலூர் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் சோலையூர் நீர் ஊந்து நிலையம் ஆகியற்றின் ஜெரேட்டர்கள் பழுது நீக்கம் செய்யும் பணி (2022–2023) | 208139 |
| 9 | வார்டு எண்.1 முதல் 18 வரையில் பழுதடைந்துள்ள சின்டெக்ஸ் டேங்க் மேடை அமைக்கும் பணி (2022–2023) | 296311 |
| 10 | வார்டு எண்.12, போலிஸ் ஸ்டேசன் சாலை பழுதடைந்துள்ளதை Wedmix பரப்பும் பணி (2022–2023) | 198453 |
| 11 | இந்நகராட்சியில் நகரமன்ற தலைவர் அறைக்கு கணினி, பிரிண்டர், RO Water மற்றும் பீரோ சப்ளை செய்யும் பணி (2022–2023) | 199480 |
| 12 | இந்நகராட்சி பொட்டிகான்பள்ளம் சாலையின் இருபுறங்களில் உள்ள குப்பைகளை அகற்றும் பணி (2022–2023) | 283435 |
| 13 | வார்டு எண். 1 முதல் 18 வரை தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு உதிரிபாகங்கள் சப்ளை செய்யும் பணி (2022–2023) | 296337 |

| **வ.எண்** | **பணியின் விவரம்** | **செலவினம் தொகை ரூ.** |
|---|---|---|
| **குடிநீர் நிதி (Water Fund)** (2021–2022) | | |
| 1 | ஜோலார்பேட்டை நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 18 வரை குடிநீர் விநியோகம் பிராதான குழாய்கள் பகிர்மான குழாய்களில் ஏற்படும் நீர் கசிவுகளை பராமரிப்பு பணிகள் (2021–2022) | 950000 |
| 2 | ஜோலார்பேட்டை நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 8 வரை ஆழ்துளை மின் மோட்டார் மற்றும் கைபம்புகள் பராமரிப்பு பணிகள் (2021–2022) | 498448 |

| | | |
|---|---|---|
| 3 | ஜோலார்பேட்டை நகராட்சியில் வார்டு எண்.9 முதல் 18 வரை ஆழ்துளை மின் மோட்டார் மற்றும் கைபம்புகள் பராமரிப்பு பணிகள் (2021–2022) | 500000 |
| 4 | ஜோலார்பேட்டை நகராட்சி, வார்டு எண்.1 முதல் 18 வரை உள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோகத்திற்கு நீரேற்றம் செய்யப்படும் மேட்டுசக்கரகுப்பம் மற்றும் சோலையூர் பகுதிகளில் உள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டிகளில் அமைக்கப்பட்டுள்ள குளோரினேசன் பிளான்ட் (Clorination Plant)–களுக்கு திரவ குளோரின் சப்ளை செய்ய வேண்டியுள்ளது. எனவே, பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு மேற்கண்ட நீரேற்று நிலையங்களுக்கு திரவ குளோரின் (Liquid Clorine) சப்ளை செய்ய (2021–2022) | 476439 |
| 5 | வார்டு எண். 1 முதல் 18 வரை மின் மோட்டார் சப்ளை செய்யும் பணி (2022–2023) | 297159 |
| 6 | ஜோலார்பேட்டை நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 18 வரை ஆழ்துளை மின் மோட்டார் மற்றும் கைபம்புகள் பராமரிப்பு பணிகள் (2022–2023) | 920441 |
| 7 | வார்டு எண். 1 முதல் 18 வரை மின் மோட்டார் சப்ளை செய்யும் பணி (2022–2023) | 296416 |
| 8 | ஜோலார்பேட்டை நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 18 வரை குடிநீர் விநியோகம் பிராதான குழாய்கள் பகிர்மான குழாய்களில் ஏற்படும் நீர் கசிவுகளை பராமரிப்பு பணிகள் (2021–2022) | 948628 |
| 9 | வார்டு எண்,.1 முதல் 18 வரை HDP Tank MS Kiosk Bok Nipple GI Coupling பராமரிப்பு பணி (2022–2023) | 391664 |
| 10 | வார்டு எண். 1 முதல் 18 வரை மின் மோட்டார் சப்ளை செய்யும் பணி (2022–2023) | 488280 |
| 11 | வார்டு எண். 1 முதல் 18 வரை குடிநீர் விநியோக பணிக்கு பொருட்கள் சப்ளை செய்யும் பணி (2022–2023) | 293008 |
| 12 | இந்நகராட்சியில் திருப்பத்தூர் – வாணியம்பாடி ரோடு தேசி ய நெடுஞ்சாலை பைப்லைன் பழுதடைந்த காரணத்தினால் டிராக்டர் மூலம் 'குடிநீர் விநியோகம் செய்தல் பணி (2022–2023) | 29960 |
| 13 | இந்நகராட்சியில் திருப்பத்தூர் – வாணியம்பாடி ரோடு தேசி ய நெடுஞ்சாலை பைப்லைன் பழுதடைந்த காரணத்தினால் HDP Pipe Line அமைக்கம் பணி (2022–2023) | 1300000 |

| வ.எண் | பணியின் விவரம் | செலவினம் தொகை ரூ. |
|---|---|---|
| **தூய்மை இந்தியா திட்டம் (SBM and SWM)** | | |
| 1 | ஜோலார்பேட்டை நகராட்சி, பொட்டிகானப்ள்ளம் உரக்கிடங்கில் பையோ மைனிங் செய்யும் பணி (2018-2019) | 8320319 |

| வ.எண் | பணியின் விவரம் | செலவினம் தொகை ரூ. |
|---|---|---|
| **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுதிட்டம் (MLACDS)** | | |
| 1 | வார்டு எண்.12, அனிபீரன் தெருவில் அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி (2019-2020) | 1000000 |

## வரியினம்:-

**அறிக்கையாண்டில் நடப்பு வரியினத்தில் ரூ.இலட்சத்தில்**

| | |
|---|---|
| அறிக்கையாண்டு கேட்பு சொத்து வரி | 87.21 |
| அறிக்கையாண்டில் வசூல் சொத்து வரி | 73.53 |
| வசூல் சதவீதம் சொத்து வரி | 84.32 |

## வரியில்லாயினம்:-

**அறிக்கையாண்டில் நடப்பு வரியில்லாயினத்தில் ரூ.இலட்சத்தில்**

| | |
|---|---|
| அறிக்கையாண்டு கேட்பு | 47.72 |
| அறிக்கையாண்டில் வசூல் | 22.98 |
| வசூல் சதவீதம் | 48.15 |

## தணிக்கை:-

2005-06ம் ஆண்டு முதல் 2021-2022ம் ஆண்டு முடிய மொத்தம் 370 தணிக்கைத் தடை பத்திகள் நிலுவையாக உள்ளன. மேலும் இந்நகராட்சியில் அடுத்து நடைபெறும் கூட்டமர்வின் போது மேற்படி தணிக்கைத் தடை பத்திகள் நீக்கம் செய்ய போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் சிறுசேமிப்புத் திட்டத்திற்காக இலக்கு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை.

## பொது வருமானம்:–

### வருவாய் கணக்கு

இந்நகராட்சியில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1998 பிரிவு 81ன் கீழ் கீழ்கண்டுள்ள விவரப்படி சொத்துவரி விதிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பொது கணக்கு | – | 7% |
| 2. | குடிநீர் மற்றும் வடிகால் வரி | – | 3% |
| 3. | கல்வி வரி | – | இல்லை |
| 4. | நூலக வரி | – | 1% |

9209 சொத்துவரி விதிப்புகள் உள்ளன. சொத்துவரி விகிதம் 11%

## தொழில் வரி விகிதம்:–

| வ.எண். | நபர் ஒருவர் (அ) நிறுவனத்தின் 6 மாத ஊதியம் அல்லது வருமானம் விவரம் | அரையாண்டுக்கான வரி விகிதம் 01.10.2018 முதல் |
|---|---|---|
| 1 | ரு.21000 முதல் 30000 வரை | ரூ.167/– |
| 2 | ரூ.30001 முதல் 45000 வரை | ரூ.402/– |
| 3 | ரூ.45001 முதல் 60000 வரை | ரூ.709/– |
| 4 | ரூ.60001 முதல் 75000 வரை | ரூ.1182/– |
| 5 | ரூ.75000 மேல் | ரூ.1250/– |

அறிக்கையாண்டு முடிய 726 இனங்களுக்கு தொழில் வரி விதிக்கப்பட்டு கேட்பு தொகை ரூ.62.57 இலட்சத்தில் ரூ.59.88 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் தொழில் வரி வசூல் சதவீதம் 95.70% ஆகும்.

## குடிநீர் கட்டணம்:–

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வீடுகளுக்கு அறிக்கையாண்டு முடிய 4234 வீடுகளுக்கு குடிநீர் குழாய் இனைப்பு வழங்கப்பட்டு இனைப்பு ஒன்றிற்கு மாதம் ரூ.80/– வீதம் குடிநீர் கட்டணம் வசூலீக்கப்பட்டு வருகிறது. கேட்பு 74.48 வசூல் 30.12 நிலுவை 44.36 அறிக்கையாண்டில் 40.44% குடிநீர் கட்டணம் வசூலீக்கப்பட்டுள்ளது.

## நகர அமைப்பு பிரிவு:–

நகராட்சியில் நகரஅமைப்பு ஆய்வாளர் பணியிடம் அரசாணையின் படி தோற்றுவிக்கப்பட்டு 18.12.2013 முதல் நகரமைப்பு ஆய்வாளர் பணிபுரிந்து வருகிறார்.

## முதலீடுகள்:-

அறிக்கையாண்டில் முதலீடுகள் ஏதுமில்லை.

## கணக்கு அறிக்கை:-

2021–2022ம் ஆண்டு வரை கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளது.

2022–2023ம் ஆண்டு கணக்குகள் முடிக்கப்பட்டு தணிக்கைத்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**<u>பொது குறிப்பு:–</u>**

நகராட்சி நிர்வாகம் மேம்பட ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் நகர மன்ற தலைவர், நகரமன்ற துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கும் நன்றியை தெரிவித்து கொள்ளப்படுகிறது.

ஆணையாளர்

ஜோலார்பேட்டை நகராட்சி